www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR11Acc

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

**வகுப்பு 11**

நேரம் : 3.00 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:*** **20×1=20**

1) TALLY என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
   அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
   ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
   இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
   ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

2) கணக்கியலில் எத்தனை அடிப்படைகள் உள்ளன?
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

3) வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து
   அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத் தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத் தன்மை கருத்து

4) வணிகத்தின் நிகர இலாபம் ............ அதிகரிக்கும்.
   அ) எடுப்புகளை ஆ) பெறுதல்களை இ) பொறுப்புகளை ஈ) முதலினை

5) தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
   அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு
   இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

6) கொள்முதல் செய்த சரக்குகள் நகராட்சி எல்லைக்குள் நுழையும்போது உள்ளூர் அதிகாரிகளால் விதிக்கப்படும் வரி ............
   அ) இறக்குமதி வரி ஆ) துறைமுகக் கட்டணம்
   இ) உள்நுழைவு வரி ஈ) கூலி

7) வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
   அ) கடந்த காலத்திற்கு ஆ) எதிர் காலத்திற்கு
   இ) நடப்பு காலத்திற்கு ஈ) எந்த காலத்திற்கும்

8) இருப்பாய்வு என்பது ஒரு
   அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு

9) கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
   அ) முதல் கணக்கு ஆ) பற்பல கடனீந்தோர் கணக்கு
   இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) எடுப்புகள் கணக்கு

10) ஒரு நடவடிக்கையின் பற்று (ம) வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது
   அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப்பதிவு

11) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது
   அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
   இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

12) இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
   அ) பகுதிவிடு பிழைகள் ஆ) விதிப்பிழைகள்
   இ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள் ஈ) குறைவாக கூட்டுதல் பிழைகள்

13) வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போது வங்கியானது
   அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும்
   ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
   இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும்
   ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14) இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாபநட்டக் கணக்கிற்கு

15) சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

16) நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு
இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

17) சொத்துக்கணக்கு கையாள்வது
அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
இ) சொத்துக்கள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

18) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது
அ) வியாபாரக் கணக்கில் பற்றுப் பக்கம்
ஆ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம்
ஈ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

19) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

20) ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல் ............
அ) ₹ 1,60,000 ஆ) ₹ 60,000 இ) ₹ 1,00,000 ஈ) ₹ 40,000

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.

22) கணக்கியலை வரையறுக்கவும்.

23) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| அ) சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| ₹ 1,00,000 | = | ₹ 80,000 | + | ? |
| ஆ) சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| ₹ 2,00,000 | = | ? | + | ₹ 40,000 |

24) எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

25) வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

26) பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது.
ஆ) கடனுக்கு சரக்கு விற்றது.
இ) கடனுக்கு சொத்துக்கள் வாங்கியது.
ஈ) கடனுக்கு சரக்கு வாங்கியது.

27) ஒரு நிறுவனம் ₹ 50,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹ 5,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்கோட்டு முறையில் தேய்மானத் தொகையை கணக்கிடுக.

28) கீழ்க்கண்ட சரிகட்டுதல்களுக்கு சரிகட்டுப் பதிவுகள் தரவும்.
i) கொடுபட வேண்டிய கூலி ₹ 5,000.
ii) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ₹ 1,000.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2016 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| | 30 | அறைகலன் விற்றது | 400 |

30) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து விற்பனைத் தொகையைக் காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 20,000 |
| நிகர கொள்முதல் | 70,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 30,000 |
| மொத்த இலாப விகிதம் (விற்பனையில்) | 20% |

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

32) கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புக்கள் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டுக.

(i) வெளித்தூக்கு கூலி (ii) கூலி
(iii) வாடகை பெற்றது (iv) முதல்
(v) விற்பனை (vi) விற்பனைத் திருப்பம்

33) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் போது கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தவும்.

அ) அகிலாவுக்கு ₹ 1,520-க்கு கடனுக்கு சரக்கு விற்றது அவர் கணக்கில் ₹ 1,250 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

ஆ) ₹ 2,000 ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கியது. பேரேட்டில் இயந்திரக் கணக்கில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது.

இ) கொள்முதல் ஏட்டின் கூட்டுத்தொகை ₹ 899 முன் எடுத்து எழுதும்போது ₹ 989 என எழுதப்பட்டுள்ளது.

34) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | கையிருப்பு ரொக்கம் | 11,200 |
| | 5 | இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது | 300 |
| | 7 | வாடகை செலுத்தியது | 30 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்குகளை விற்றது | 300 |
| | 10 | மோகனுக்கு செலுத்தியது | 700 |
| | 27 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 200 |
| | 31 | சம்பளம் கொடுத்தது | 100 |

35) பின்வரும் விவரங்களிலிருந்து 2016 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹ 7,130.

ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹ 1,000.

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹ 800.

36) கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களை குறிப்பிடுக.

37) "பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்" - விவரி.

38) பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர லாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | இயந்திரம் | 43,200 |

39) முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

40) 31-3-2016 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹ 10,000.

**சரிகட்டுதல்** : வாராகடன் ₹ 300 போக்கெழுதவும்.

சரிகட்டும் பதிவு தந்து இவ்விவரம் 2016, மார்ச் 31 ஆம் நாளன்றைய இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7×5=35

41) அ) குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

| 2018 | | | ₹ |
|---|---|---|---|
| மார்ச் | 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 6 | கமலேசிடமிருந்து சரக்கு வாங்கியது | 15,000 |
| | 8 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 28,000 |
| | 10 | ரவிக்கு விற்பனை செய்தது | 10,000 |
| | 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| | 18 | வாடகை செலுத்தியது | 500 |
| | 25 | ரவியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| | 28 | சொந்த பயனுக்காக எடுத்த ரொக்கம் | 4,000 |

**(அல்லது)**

ஆ) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக. (ஏதேனும் 5)

42) அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஜூன் | 1 | ராமு ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 50,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 8,000 |
| | 8 | தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 9,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 4,000 |
| | 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | 5,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து டிசம்பர் 31, 2017-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்க.

அ) வங்கி அறிக்கையின்படி இருப்பு ₹ 25,000.

ஆ) மறுக்கப்பட்ட காசோலை ₹ 250 குறித்து ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

இ) வங்கியில் செலுத்திய காசோலை தொகை ₹ 3,500 இன்னும் வசூலிக்கப்படவில்லை.

ஈ) வங்கிக் கட்டணம் ₹ 300 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

உ) விடுத்த காசோலை ₹ 9,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.

43) அ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புக்களைக் கொண்டு 31-3-2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராகடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

**(அல்லது)**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயார் செய்யவும்.

2017

| | | |
|---|---|---|
| பிப்ரவரி | 1 | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 12,480. |
| | 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 15,000. |
| | 6 | மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 12,100. |
| | 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு அதற்கு பணம் செலுத்தப்படவில்லை ₹ 1,200. |
| | 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை ₹ 1,500. |
| | 10 | மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 13,300. |
| | 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது ₹ 15,200. |

44) அ) கல்யாண சுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | ரொக்க இருப்பு | 42,500 |
| | | வங்கி இருப்பு | 35,000 |
| | 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| | 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| | 6 | ரொக்க கொள்முதல் | 14,300 |
| | 9 | மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது | 2,000 |
| | 10 | பொங்கல் முன்பணம் பணியாளருக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| | 12 | நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |
| | 17 | மகேஷ்க்கு கொடுக்க வேண்டிய ₹ 20,000-த்தில் ₹ 19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது. | |
| | 20 | சொந்த செலவுக்கு பணம் எடுத்தது | 20,000 |
| | 30 | தானியங்கி இயந்திரம் மூலம் அலுவலக செலவுக்குப் பணம் எடுத்தது | 1,500 |

**(அல்லது)**

ஆ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 | | | ₹ |
|---|---|---|---|
| ஜூலை | 1 | காசாளரிடம் முன்பணம் பெற்றது | 2,000 |
| | 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடு வாங்கியது | 100 |
| | 8 | வெள்ளைத்தாள் வாங்கியது | 50 |
| | 9 | ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| | 15 | கூலி கொடுத்தது | 300 |
| | 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |
| | 21 | எழுதுபொருள் வாங்கியது | 450 |
| | 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| | 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| | 27 | சிற்றுண்டி செலவு செய்தது | 250 |
| | 31 | ஏற்றிச்செல் செலவுகள் செய்தது | 150 |

45) அ) பின்வரும் செலவினங்களை முதலினம் அல்லது வருவாயினம், நீள்பயன் வருவாயினச் செலவினங்களா எனக் கூறவும்.

i) தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ₹ 12,000.

ii) கட்டிடம் கட்டியதற்கான தொகை ₹ 10,00,000.

iii) பழைய அறைகலன் விற்றதில் நட்டம்.

iv) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ₹ 12,00,000.

vi) கடன் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சட்டச் செலவுகள்.

**(அல்லது)**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆ) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தவும்.

அ) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ₹ 2,000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) விற்பனைத் திருப்ப ஏட்டில் ₹ 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

இ) ₹ 200-க்கு சரக்கு கொள்முதல் செய்தது கொள்முதல் கணக்கில் ₹ 2,000 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

ஈ) விற்பனை ஏட்டில் ₹ 1,500 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

உ) முகிலுக்கு ரொக்கம் ₹ 2,800 செலுத்தியது அகில் கணக்கில் ₹ 2,000 என பற்று வைக்கப்பட்டுள்ளது.

46) அ) இராம் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ₹ 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை நிலா நிறுவனத்திடமிருந்து கடனாக வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ₹ 10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுக்கு இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ல் முடிக்கப்பெறுகின்றன.

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாப நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் கீ/கொ | 1,50,000 | வாராகடன் | 8,500 |
| வெளித்தூக்குக்கூலி | 25,500 | பெற்ற தள்ளுபடி | 4,600 |
| அலுவலக வாடகை | 7,000 | பெற்ற வாடகை | 7,000 |
| அலுவலக எழுதுபொருள் | 3,500 | | |
| வழங்கல் செலவுகள் | 2,000 | | |
| விளம்பரச் செலவுகள் | 3,800 | | |
| பங்காதாயம் பெற்றது | 9,000 | | |

47) அ) பின்வரும் விவரங்களிலிருந்து, அர்ச்சனாவின் 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கைத் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 80,000 |
| கொள்முதல் | 8,60,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 52,000 |
| கூலி | 24,000 |
| கொள்முதல் திருப்பம் | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 3,16,000 |
| கொள்முதல் மீதான இறக்குமதி வரி | 30,000 |
| விற்பனை | 14,40,000 |

**சரிகட்டுதல்கள்:**

அ) இறுதிச் சரக்கிருப்பு ₹ 1,00,000.

ஆ) கொடுபட வேண்டிய கூலி ₹ 12,000.

இ) உள் ஏற்றிச்செல் செலவு முன்கூட்டிச் செலுத்தியது ₹ 5,000.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.,

அ) முருகன் ₹ 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000.

இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000.

ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தப்பட்டது ₹ 5,000.

உ) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com